கூடுதல் வருமானம் தரும் கூட்டுப் பயிர்.. மானாவாரியிலும் மனம் நிறைந்த மகசூல்!



வழக்கமாக மானாவாரி விவசாயம் என்றாலே குறைந்த மகசூல், குறைந்த லாபம் மட்டும்தான் கிடைக்கும் என்று சொல்லும் விவசாயிகள் தான் அதிகம். இவர்களுக்கு நடுவே ஒரே பயிரை சாகுபடி செய்யாமல் கொஞ்சம் மாற்றி, பல பயிர் சாகுபடி செய்தால் நல்ல வருமானத்தை எடுக்கலாம் என்கிறார் அரியலூர் மாவட்டம், கீழபழுருக்கு அருகில் உள்ள கோக்குடியைச் சேர்ந்த தேவசகாயம்.சொந்த நிலம் ஒரு ஏக்கர், குத்தகை நிலம் ஒரு ஏக்கர் என்று மொத்தம் இரண்டு ஏக்கரில் வெள்ளாமை செய்கிறேன். சொந்த நிலத்தில் தண்ணீர் வசதி இருப்பதால் நெல், செண்டுமல்லி, காக்கரட்டான் மூன்றையும் சாகுபடி செய்து கொண்டிருக்கிறேன். குத்தகை நிலம் மானாவாரி பூமி என்பதால் ஒரு போகம் மட்டும்தான் விவசாயம் செய்ய முடியும். அதில் வெள்ளைச் சோளம், துவரை, செண்டுமல்லி மூன்றையும் சாகுபடி செய்து கொண்டு இருக்கேன்.

சின்ன இடமாக இருந்தாலும், மூன்று பயிர் வெள்ளாமை என்பதால் நல்ல வருமானத்தைப்பார்க்க முடிகிறது. வெள்ளைச் சோளம், துவரை, செண்டுமல்லி மூன்றிற்கும். வெம்மண், கரிசல் மண் வகைகள் ஏற்றது. மானாவாரி சாகுபடிக்கு ஆடிப் பட்டம்தான் சிறந்தது. ஆடி, ஆவணி, மாதங்களில் மழை பெய்து நிலம் ஈரமான பிறகு, சட்டிக் கலப்பை மூலம் உழுது மண்ணின் இறுக்கத்தைக் குறைக்க வேண்டும். பின் களைகள் நீங்கும் அளவிற்கு மூன்று உழவு போட வேண்டும். பின் 9 கிலோ வெள்ளைச் சோளம், 4 கிலோ துவரை இரண்டையும் சேர்த்து விதைத்து மண் மூடுமாறு ஒரு உழவு போட வேண்டும். நிலத்தின் ஈரப் பதத்தைப் பொறுத்து, ஒரு வாரத்தில் முளைவிட்டு விடும்.

செண்டுமல்லிக்கு நாற்று நடவு என்பதால் சோளம், துவரை விதைகளை விதைக்கும் சமயத்திலேயே 15 அடிக்கு 10 அடி அளவில் தனியாக நாற்றுக்காகப் பாத்தி அமைத்துக் கொள்ள வேண்டும். அதில் 4 கூடை எருவைக் கொட்டி கலைத்து விட்டு, பின் செண்டுமல்லி விதையைத் தூவி (ஏக்கருக்கு அரை கிலோ விதைகள்) எருவையும் மண்ணையும் கலந்து விதைகள் மீது தூவி மூடுமாறு செய்ய வேண்டும். பின் தினமும் பூவாளியால் தண்ணீர் தெளித்து வர வேண்டும். இருபது நாட்களில் அது முளைத்து வந்துவிடும்.இந்த சமயத்தில் சோளம், துவரை இரண்டும் ஒரு அடி உயரத்திற்கு வளர்ந்திருக்கும்.

இதில் ஒரு முறை களை எடுத்து, 50 கிலோ 20 : 0 : 15 என்ற கலப்பு உரத்தை பரவலாகத் தூவ வேண்டும். இந்த சமயத்தில் ஒரு மழை பெய்திருந்தால் தான் செண்டுமல்லி நாற்றை நடவு செய்ய முடியும். எப்படியாவது ஒரு மழை தவறாமல் கிடைத்துவிடும். அந்த மழை பெய்த பிறகு செடிக்குச் செடி இரண்டரை அடி இடைவெளி இருக்குமாறு ஒன்றிரண்டு செண்டுமல்லி நாற்றுகளைச் சேர்த்து சேர்த்து நடவு செய்ய வேண்டும் (ஒரு ஏக்கரில் பத்தாயிரம் செடிகள் வரை நடலாம்) இரண்டிரண்டாக நடவு செய்யும் போது ஏதாவது ஒரு செடி கண்டிப்பாக முளைத்து விடும்.

சமயங்களில் இரண்டு செடிகளும் கூட நன்றாக வளர்ந்து பூ எடுக்கும். இதன் பிறகு களைகள் முளைத்தாலும் அதைப் பற்றி கவலையில்லை. இயற்கை மனது வைத்து மழை பொழிந்தால் மட்டும் போதும். பெரிதாக பூச்சித் தாக்குதல்களும் இருக்காது என்பதால் பூச்சிக்கொல்லிகள் அடிக்க தேவையில்லை.சோளம் நடவு செய்த 60 – ம் நாள் முதல் 70 நாட்களுக்குள் பூ எடுத்து 90 – 100 நாட்களுக்குள் முற்றிவிடும். அதன் பிறகு சோளத்தை அறுவடை செய்து குச்சி வைத்து தட்டியோ, தார்ச் சாலையில் போட்டு அடித்தோ சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

| ஒரு ஏக்கரில் வெள்ளைச் சோளம், துவரை, செண்டுமல்லி சாகுபடிக்கு ஆகும் செலவு – வரவு கணக்கு | | |
|---|---|---|
| **விவரம்** | **செலவு** | **வரவு** |
| குத்தகை | 600 | |
| உழவு | 2,000 | |
| விதைச் சோளம் | 120 | |
| துவரை விதை | 120 | |
| விதைப்பு | 150 | |
| பூ விதை | 500 | |
| பூ நடவு | 1,000 | |
| உரம் | 500 | |
| பூ அறுவடை | 560 | |
| சோளம் அறுவடை | 800 | |
| துவரை அறுவடை | 400 | |
| பூ மூலம் வரவு | | 3,000 |
| சோளம் வரவு | | 4,800 |
| துவரை வரவு | | 8,000 |
| மொத்தம் | 6,750 | 15,800 |

| | | |
|---|---|---|
| நிகர லாபம் | | 9,050 |
| பூ சராசரியாக கிலோ ரூ. 30 வீதம் 100 கிலோவிற்கும், சோளம் சராசரியாக மூட்டை< ரூ.800 வீதம் 6 மூட்டைகளுக்கும், துவரை கிலோ ரூ. 40 வீதம் 200 கிலோவிற்கும் கணக்கிடப்பட்டுள்ளது. | | |

செண்டுமல்லி நடவு செய்த 60 – ம் நாளில் பூ எடுக்க ஆரம்பித்துவிடும். அதிலிருந்து நான்கு நாட்களுக்கு ஒரு தடவை என்ற கணக்கில் ஒரு மாதத்திற்கு அறுவடை செய்யலாம். ஒரு முறைக்கு 10 முதல் 20 கிலோ வரை கிடைக்கும்.துவரை நடவு செய்த நான்கரை மாதத்திற்குப் பிறகு பூ எடுத்து பிஞ்சுவிடும். ஆறு மாதத்திற்குப் பின்தான் அறுவடைக்கு வரும் அந்த சமயங்களில் ஒருவேளை அதிக மழை பெய்தால், நிலத்தில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

துவரை முற்றியவுடன், அறுத்து கட்டிக்கட்டி செங்குத்தாக நிற்க வைத்தால், காய்ந்துவிடும். பின் அப்படியே தரையில் அடித்தால் துவரை உதிர்ந்துவிடும். துவரை அறுவடை முடிந்த பிறகு எஞ்சியிருக்கும் சோளத் தட்டையையும் அறுத்து எடுத்து ஆடு, மாடுகளுக்கு உணவாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.சோளத்தை சுத்தப்படுத்தினால் 600 கிலோ (1 ஏக்கரில்) கிடைக்கும். ஒரு மூட்டை (100 கிலோ) 700 ரூபாயில் இருந்து 1000 ரூபாய் வரை விற்பனையாகிறது. ஏழு அறுவடையும் சேர்த்தால் மொத்தம் 100 கிலோ செண்டுமல்லி கண்டிப்பாக கிடைக்கும்.

கிலோ 10 ரூபாயில் இருந்து 50 ரூபாய் வரைக்கும் விற்பனையாகின்றது. துவரையை சுத்தப்படுத்தினால் 200 கிலோ (1 ஏக்கரில்) கிடைக்கும். கிலோ 40 ரூபாய் வரை விற்பனை ஆகின்றது. எப்படியும் தேவையான அளவு மழை பெய்தால் மூன்றையும் சேர்த்து 9,000 ரூபாய்க்கு குறையாமல் லாபம் கிடைக்கும். அந்த சமயத்தில் பூ, பருப்பு இதற்கெல்லாம் தட்டுப்பாடு இருந்தால் லாபம் இன்னும் கூடும்.மானாவாரி நிலம் என்பதால் குறைந்த நிலத்தில் விவசாயம் செய்வதுதான் நல்லது. அதேபோல் பெரும்பாலும் தேவையில்லாமல் வேலைக்கு ஆட்களைக் கூப்பிடாமல் நம் குடும்பத்தில் இருப்பவர்களே வேலையை செய்து கொண்டால் இன்னும் நிறைய செலவை மிச்சப்படுத்த முடியும். கால்நடைகளுக்கு உணவும் கிடைத்துவிடும். மானாவாரி வெள்ளாமையில் விளைவதை பெரும்பாலும் வீட்டுத் தேவைக்குதான் வைத்திருப்பார்கள். அது போக மிச்சத்தைதான் விற்பார்கள்.

அது போல தான் நானும் தேவைக்குப் போக மிச்சத்தைதான் விலைக்குக் கொடுப்பேன்.

**தொடர்புக்கு:**

தேவைசகாயம்,
கீழபழுருக்கு அருகில்,
அரியலூர் மாவட்டம்.
அலைபேசி: 99651 - 84437